ஹேமாஸ் லொஜிஸ்டிக்ஸ் (தனியார்) லிமிட்டட்			-	-
ஏனைய போக்குவரத்து - பெறத்தக்கவைகள்			130,481,949	54,860,420
			569,395,719	575,339,518
			3,672,671,216	1,255,481,447
18.2.1 **விசேட கருத்திட்டங்கள் / சேவைகள் செலுத்தத்தக்கவைகள்**				
கடைகள்				
நில்கமல் சலவரன் பிரதர்ஸ்			329,338	329,338
நிப்போன் பிளாஸ்டிக் தனியார் லிமிட்டட்			265,548	265,548
பினிக்ஸ் இன்டஸ்ரீஸ் லிமிட்டட்			7,136,972	7,136,972
			7,731,857	7,731,857

அடைப்புக் குறிக்குள் உள்ள தொகைகள் கழிப்பனவினைக் குறிக்கின்றன.
நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் தொடருகின்றன.

(Expressed in Sri Lankan Rupees)

டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்காலவது	குழுமம் 2018	குழுமம் 2017	CWE 2018	CWE 2017
28.1.1 **வியாபார செலுத்தத்தக்கவைகள்**				
நடைமுறை மீதிகள்				
அம்புல 2கே பூட்ஸ் புரொடக்ஸ்	256,160	256,160	256,160	256,160
ஏ.எப்.டீ மெல் அன்ட் சன்ஸ் தனியார் லிமிட்டட்	974,494	813,558	974,494	813,558
கொன்பிபி கப்பிரல் தனியார் லிமிட்டட்	392,782	392,782	392,782	392,782
டீ.எம்.கே.டிரொல்டிங்ஸ்	2,793,423	11,133,792	2,793,423	11,133,792
பொன்ரோ பிரான்ட்ஸ் தனியார் லிமிட்டட்	(257,357)	(257,357)	(257,357)	(257,357)
ஜாதி ஜாபிப் கம்பனி பிலோன் லிமிட்டட்	80,000	360,000	80,000	360,000
ஒப்பி குட் லங்கா பூட் லிமிட்டட்.	4,431,415	16,629,108	4,431,415	16,629,108
மக்லிஸ் கம்பனி லிமிட்டட்	64,685	64,685	64,685	64,685
பதுமா அரிசி ஆலை	1,307,571	1,307,571	1,307,571	1,307,571
ஆர்.எஸ்பேர்ம்பெர்னான்டோ	214,300	211,000	214,300	211,000
ரெலிக் இன்ரநஷனல்	(32,000)	(32,000)	(32,000)	(32,000)
செலுத்தத்தக்க கழிவு	21,392,668	21,190,245	-	-
அரச வர்த்தக (கூட்டுறவு மொத்த விற்பனை தாபனம்) கம்பனி	2,204,335	2,312,080	2,156,835	2,264,580
நிருமாணம் - செலுத்தத்தக்கவை	207,784,727	285,164,136	-	-
உப ஒப்பந்ததாரர்கள்	24,122,029	21,935,543	-	-
PULSES SPLITTING & PROCESSING INDUSTRY	-	2,594,800	-	2,594,800
சண்முகம் ஸ்ரோர்ஸ்	1,125,000	1,125,000	1,125,000	1,125,000
கொமன்வெல்த் என்ரபிறைஸ்ஸ்	-	3,684,667	-	3,684,667
கூமொதா கடன்கொடுத்தோர் - பொதிவிடல்	-	289,332	-	289,332
லங்கா சதொச - கடன் கொடுத்தோர்	11,997,140	14,000,740	11,997,140	14,000,740
குளோபல் டிரேடிங் கம்பனி	-	1,702,806	-	1,702,806
செலுத்தத்தக்க சங்கத் தீர்வை	-	2,626,919	-	2,626,919
ஆலைகளுக்குச் செலுத்தக்க அரைத்தல் கட்டணம்	-	232,563,305	-	232,563,305
றிசன்ற் இன்ரநஷனல் லிமிட்டட்	-	104,000	-	104,000
உணசு ஆணையாளர் திணைக்களம் (வாடகை)	17,623,232	-	17,623,232	-
ஏனைய வியாபார கடன்கொடுத்தோர்	1,835	-	-	-
லங்கா பொலிசர் லிமிட்டட்	3,477,600	3,149,496	3,477,600	3,149,496
	299,954,039	**623,322,367**	**46,605,280**	**294,984,943**
நீண்ட கால வருமதிகள்				
அக்ராமா லங்கா டிரேடிங் தனியார் லிமிட்டட்	78,396	78,396	78,396	78,396
சீ அன்ட் சீ பூட் புரொடக்ஸ் தனியார் லிமிட்டட்	3,701	3,701	3,701	3,701
டாட் லங்கா டிரேடிங் கம்பனி லிமிட்டட்	180,572	180,572	180,572	180,572
டி. ஜே.புரொடக்ஸ் லிமிட்டட்	654	654	654	654
ஜீவன் இஞ்சினியரிங்	1,197,449	1,197,449	1,197,449	1,197,449
சதுமுகன் டிரேடிங்	9,604	9,604	9,604	9,604
நூராணி எஸ்ரேர்ஸ் லிமிட்டட்	62,457	62,457	62,457	62,457
பீ.கே..ஆமில ரஞ்சித் (தேங்காய்)	(152)	(152)	(152)	(152)
எஸ். எஸ். ஏஜென்சி	19,500	19,500	19,500	19,500
ஸ்மாட் வில்ஸ் தனியார் லிமிட்டட்	20,184	20,184	20,184	20,184
கபரிங்க புரொடக்ஸ்	1,498	1,498	1,498	1,498
சுவிற்ஸ் லங்கா தனியார் லிமிட்டட்	246,636	246,636	246,636	246,636
விகேஜ்	1,386	1,386	1,386	1,386
மொபம். பிளான்ரேஷன்	600,000	600,000	600,000	600,000
ஜாதி ஜாபிப் கம்பனி பிலோன் லிமிட்டட்	225,000	225,000	225,000	225,000
ஜே.டி.வெஞ்ர்ல்	6,937	6,937	6,937	6,937
வ்ரார் டிரேடிங் கம்பனி தனியார் லிமிட்டட்	809,892	809,892	809,892	809,892
சதன் ஸ்ரோர்ஸ்	164,373	164,373	164,373	164,373
குமரன் என்ரபிறைசல்	48,603	48,603	48,603	48,603
ரஞ்தொ டிரேடர்ஸ்	17,755	17,755	17,755	17,755
ரெலிக் இன்ரநஷனல்	34,250	34,250	34,250	34,250
சீ.ஜீ.ஐ.டிரேடர்ஸ்	17,226	17,226	17,226	17,226
டப்.ஏ.என்.நுவன் குமார	132,025	132,025	132,025	132,025
எஸ்எஸ் பூட் புரொடக்ஸ் லிமிட்டட்	714,807	714,807	714,807	714,807
மீதி மீ சே	**4,592,752**	**4,592,752**	**4,592,752**	**4,592,752**

அடைப்புக் குறிக்குள் உள்ள தொகைகள் கழிப்பணவிலைக் குறிக்கின்றன.
நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் தொடருகின்றன.

(Expressed in Sri Lankan Rupees)

டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கானது	Group		CWE	
	2018	2017	2018	2017
மீதி மீள	4,592,752	4,592,752	4,592,752	4,592,752
செவனகல சீனி கைத்தொழில் லிமிட்டட்	1,265,000	1,265,000	1,265,000	1,265,000
சிலோன் வெஜிங் மெசின் லிமிட்டட் - TP	150,749	150,749	150,749	150,749
எஸ்.பி.பூட்ஸ்	24,670	24,670	24,670	24,670
PULSES SPLITTING &PROCESSING INDUSTRY-TP	(2,828,782)	(2,828,782)	(2,828,782)	(2,828,782)
இலங்கை ரெலகொம் - TP	10,968	10,968	10,968	10,968
அரச வர்த்தக கூட்டுத்தாபனம் - வர்த்தக கம்பனி - TP	(64,375)	(64,375)	(64,375)	(64,375)
வில்சன் டிரேடிங் கம்பனி- TP	368,182	368,182	368,182	368,182
	3,519,166	3,519,166	3,519,166	3,519,166
	303,473,204	626,841,532	50,124,445	298,504,108

28.2.1 ஏனைய செலுத்தத்தக்கவைகள்

நடைமுறை மீதிகள்				
செலுத்தத்தக்க நிருமாண கடு	(8,034,928)	(8,034,928)	(8,034,928)	(8,034,928)
எபிக் டிரேட் தனியார் லிமிட்டட்	-	13,000	-	13,000
இலங்கை கப்பல் கூட்டுதாபனம் லிமிட்டட்	12,500,516	61,285,458	12,500,516	61,285,458
MBSL காப்புறுதி கம்பனி லிமிட்டட்	-	141,659	-	141,659
ஸ்கைலைன் கொன்செப்ற்	(5,115,853)	24,083,279	(5,115,853)	24,083,279
கப்ரிம் ஸிலிரொப் லிமிட்டட்	-	75,619	-	75,619
செல் தனியார் லிமிட்டட்	2,878,203	17,860,587	2,878,203	17,860,587
நெல்சன் ஓட்டோ சேர்விஸ்.	-	172,104	-	172,104
பாதுகாப்பு வைப்பு நிதியம்	2,803,239	2,803,239	2,803,239	2,803,239
கிலிலறைக் கடுகொ - உபகரணம்	-	42,660	-	42,660
செலுத்தத்தக்க வென்ன நிவாரணம்	20,432	20,432	20,432	20,432
அக்ஸஸ் நச்சுரல் வோட்டர் லிமிட்டட்	29,032	28,152	29,032	28,152
கோல்ட் பக் இன்டஸ்ரீஸ்	-	522,603	-	522,603
ஏ.ஆர்.நிருமாணம்	24,890	-	24,890	-
கார்கில்ஸ் சிலோன் லிமிட்டட்	(380,918)	-	(380,918)	-
மாவட்ட நீதிமன்றம் - கொழும்பு	(22,080)	-	(22,080)	-
பிரதேச செயலகம் - பதியதலாவ	(150,338)	-	(150,338)	-
	4,552,193	99,013,862	4,552,193	99,013,862
நீண்ட கால வருமதிகள்				
செலுத்தத்தக்க நிருமாண கடு	(8,393,084)	(8,393,084)	(8,393,084)	(8,393,084)
தொங்கல்	(678,169)	(678,169)	(678,169)	(678,169)
டிசைன் பெரமின்ஸ் தனியார் லிமிட்டட்	2,026,740	2,026,740	2,026,740	2,026,740
ஸ்பான் நிருமாணம்	16,843,437	16,843,437	16,843,437	16,843,437
கனில் டிரேடர்ஸ்	15,750	15,750	15,750	15,750
கணிப்பிட்டுத் தவறு	1,050,494	1,050,494	1,050,494	1,050,494
நிரட்டிய நிதியம்	375,000	375,000	375,000	375,000
மிகை கேகரிப்பு	208,797	208,797	208,797	208,797
செலவினம் 1460402	941,821	941,821	941,821	941,821
பரிசுக் கூப்பன் வழங்கல்	1,000	1,000	1,000	1,000
ஏனையவை	920	920	920	920
அனுப்புகை கட்டுப்பாடுகள்	795,329	795,329	795,329	795,329
வருமானம்	102,878,173	102,878,173	102,878,173	102,878,173
நிலைறைக் கடுகொ - சம்பளம்	307,094	307,094	307,094	307,094
மிகை அரவ்டுகள்	36,924	36,924	36,924	36,924
தொங்கல்	3,368,597	3,368,598	3,368,597	3,368,598
போக்குவரத்து வசதி	45,496	45,496	45,496	45,496
இலங் காணைப்படாத ஆரம்ப மீதி	1,050,493	1,050,493	1,050,493	1,050,493
கய வி.தப்ப இலமுப்பாறல் லிட்டம் 1460307	436,761	436,761	436,761	436,761
குற்றப்பணங்கள்	3,030	3,030	3,030	3,030
கணக்குப் பதிவு	66,363,460	66,363,460	66,363,460	66,363,460
	187,678,063	187,678,064	187,678,063	187,678,064
	192,230,257	286,691,927	192,230,257	286,691,927

அடைப்புக் குறிக்குள் உள்ள தொகைகள் கழிப்பனவினைக் குறிக்கின்றன.
நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் தொடருகின்றன.

(Expressed in Sri Lankan Rupees)

டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கானது		Group 2018	Group 2017	CWE 2018	CWE 2017
28.3.1 மீளளிக்கத்தக்க வைப்புக்கள்					
மீளளிக்கத்தக்க வைப்புக்கள்	நீண்ட கால வருமதிகள்	11,944,722	11,944,722	11,944,722	11,944,722
	- நடைமுறை	9,566,623	14,708,045	9,566,623	14,708,045
கேள்வி வைப்புக்கள்		988,979	537,979	988,979	537,979
வாடகை முற்பணம்		432,000	-	-	-
வாடகை வைப்பு - அரச மருந்தாக்கல் கூட்டுறவு		-	500,000	-	-
பாதுகாப்பு வைப்புக்கள் / வாடகை வைப்புக்கள்		500,000	432,000	-	-
		23,432,324	**28,122,746**	**22,500,324**	**27,190,746**
29.1.1 சேர்ந்த செலவுகள்					
சம்பளங்கள் மற்றும் கொடுப்பனவுகள் கட்டுப்பாட்டுக் கணக்கு		19,506,556	17,331,668	38,311	30,911
செலுத்தத்தக்க ஊ.சே.நி. மற்றும் ஊ.ந.நி.		2,902,185	142,643	-	-
பதவிவிர சம்பளக் கழிப்பனவு		4,288,255	6,032,775	4,209,745	3,307,808
கணக்காய்வுக் கட்டணங்கள் / வரி ஆலோசனைக் கட்டணம்		20,745,737	17,757,387	19,545,437	16,871,687
விளம்பரச் செலவுகள்	விளம்பரச் செலவுகள்	-	375,230	-	375,230
படிகள்	படிகள்	2,000	134,000	2,000	4,000
அமையக் கூலிகள் /ஓப்பந்தம்	அமையக் கூலிகள் /ஓப்பந்தம்	3,247,942	4,410,188	3,247,942	4,410,188
கத்திகரிப்பு / நுகரத்தக்கவைகள் / ஏனையவை	கத்திகரிப்பு / நுகரத்தக்கவைகள் / ஏனையவை	350,000	448,400	350,000	448,400
தலைவரின் தொபைசி கட்டண மீள்நிதியிடல்		5,193	-	-	-
தலைவரின் சம்பளங்களும் ஏனைய செலுத்தத்தக்கவைகளும்		14,275	14,275	-	-
உசாவுதல் கட்டணம்		1,281,642	3,281,642	-	-
செலுதத்தக்க மரண உதவுதொகை		754,494	-	-	-
மின்சாரம்		2,801,674	2,387,292	2,779,335	2,302,956
புகையூட்டல் செலவுகள்		-	63,851	-	63,851
விடுமுறைக் கொடுப்பனவு கணக்கு		4,138,196	3,534,202	4,138,196	3,534,202
சட்ட மற்றும் தொழில்சார் கட்டணங்கள்		28,000	425,700	18,000	415,700
மேலதிக நேர கொடுப்பனவு		4,345,929	4,931,736	4,297,457	4,910,940
அச்சிடலும் காகிதாதிகளும்		77,557	115,717	77,557	115,717
வாடகை செலவுகள்		9,835,531	7,225,410	401,333	286,581
திருத்தங்களும் பேணுதல்களும்		-	173,139	-	173,139
பெறுகைகள் குழுக் கட்டணம்		-	12,000	-	-
உ.பெ.சே.வ. செலுத்தத்தக்கது		52,955	240,900	-	-
வாழ்வாதார படி		510,500	1,003,025	510,500	1,003,025
வரியும் வாடகையும்		5,918,281	5,920,523	5,918,281	5,920,523
தொலைபேசி கட்டணங்கள்		94,808	93,935	94,808	93,935
தொலைபேசி செலவுகள்		283,628	450,126	117,276	292,641
பிரயாணச் செலவுகள் உள்ளநாடு		-	48,385	-	-
பிரயாண கொடுப்பனவு		-	40,000	-	40,000
தொலைபேசி கொடுப்பனவு		45,725	-	-	-
விளம்பரம்		57,375	-	-	-
மிகை ஊதியம்		25,000	-	-	-
நீர்		530,833	411,595	529,581	400,347
உடன்படிக்கை புதுப்பித்தல்		-	29,624	-	29,624
இணைய மற்றும் மின்னஞ்சல் கட்டணங்கள்		213,806	216,453	213,806	216,453
காப்புறுதி		33,121	35,271	-	-
ஓய்வூதியம்		21,765	72,387	21,765	72,387
சேர்ந்த டயலொக் தொலைக்காட்சி பட்டியல்		29,162	-	29,162	-
தொழில் சங்கம்		4,900	-	4,900	-
ஏனைய தூய்மைப் பணிகள்		550,471	-	-	-
அமையாளங் காணப்பட்ட வைப்பு		27,750	27,750	-	-
மீள்ளிக்கத்தக்க தேள்வி வைப்பு பிணை		4,000	-	-	-
உரிமக் கட்டணங்கள் / ஏனையவை		96,057	123,015	-	-
		82,825,301	**77,510,241**	**46,545,391**	**45,320,242**

அடைப்புக் குறிக்குள் உள்ள தொகைகள் கழிப்பனவினைக் குறிக்கின்றன.

தலைவர்
கூட்டுறவு மொத்த விற்பனை தாபனம்

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இல.தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 12 இன் நியதிகளின்படி, 2018 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான கூட்டுறவு மொத்த விற்பனை தாபனத்தின் நிதிக்கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்ட மற்றும் ஒழுங்கமைப்பு தேவைப்பாடுகள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை.

---

1. நிதிக்கூற்றுக்கள்

1.1. தகைமைவாய்ந்த அபிப்பிராயம்

2018 டிசம்பர் 31 இலுள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, விரிவான வருமானக் கூற்று, பங்கு மூலதனத்திலான மாற்றங்களுக்கான கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான இலாப நட்டக்கூற்று, விரிவான வருமானக் கூற்று, முடிவடைந்த ஆண்டுக்கான காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் பொழிப்பு என்பவற்றினை உள்ளடக்கியதான 2018 டிசம்பர் 31 ஆம் ஆம் திகதியன்று முடிவடைந்த ஆண்டுக்கான கூட்டுறவு மொத்த விற்பனை தாபனத்தின் நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வானது 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இல. தேசிய கணக்காய்வுச் சட்டம் மற்றும் இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் அரசியலமைப்பின் உறுப்புரை 154(1) உடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 1971 ஆம் 38 ஆம் இல. நிதிச் சட்டம் ஆகியவற்றிலுள்ள ஏற்பாடுகளுக்கமைவாக எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. . அரசியலமைப்பின் உறுப்புரை 154(6) இலுள்ள ஏற்பாடுகளுக்கமைவாக பாராளுமன்றத்திற்கான எனது அறிக்கையானது விரைவில் சமர்ப்பிக்கப்படும். நிதி அறிக்கைகளில் ஏற்பட்ட தாமதம் காரணமாக, கூட்டுறவு மொத்த விற்பனை தாபனத்தின் கொடுக்கல் வாங்கல்கள் மீதான அறிக்கையானது 2021 ஜனவரி 12 ஆம் திகதியன்று அனைத்து மூன்று மொழிகளிலும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. அரசியலமைப்பின் உறுப்புரை 154(6) இலுள்ள ஏற்பாடுகளுக்கமைவாக பாராளுமன்றத்திற்கான எனது அறிக்கையானது விரைவில் சமர்ப்பிக்கப்படும்.

2018 டிசம்பர் 31 இலுள்ளவாறான கூட்டுத்தாபனத்தின் நிதி நிலைமை குறித்த உண்மையானதும் நியாயமானதுமான ஓர் பார்வையினை நிதிக் கூற்றுக்கள் தருகின்றன என்பதோடு முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக் கூற்றுக்கள் மற்றும் நிதிப்பாய்ச்சல் கூற்றுக்கள் என்பன எனது அறிக்கையின் தகைமை வாய்ந்த அபிப்பிராயத்துக்கான அடிப்படையில் விபரிக்கப்பட்ட விடயங்களின் விளைவுகள் நீங்கலாக இலங்கை அரச துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்குகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 தகைமை வாய்ந்த அபிப்பிராயத்துக்கான அடிப்படை

(அ) இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் (LKAS) இணங்காமை

(i) இ.க.நி. 08 – கணக்கீட்டு கொள்கைகள், கணக்கீட்டு மதிப்பீடுகளில் ஏற்பட்ட மாற்றங்கள் மற்றும் வழுக்கள்.

மேற்குறித்த நியமத்தின்படி, ஒரு நிறுவனம், நிதிநிலைமை அறிக்கைகளின் முதல் தொகுப்பில், பிழை ஏற்பட்ட முந்தைய காலகட்டங்களுக்கான ஒப்பீட்டுத் தொகையை மறுபரிசீலனை செய்யும் வகையில் முந்தைய காலப் பிழைகளை சரி செய்யும்.

- அரைத்தல் தொடர்பில் செலவிடப்பட்டதாக 2017 ஆம் ஆண்டுக்குரிய ரூபா.290,802,512 தொகையானது, மீளாய்வு ஆண்டிற்கான அரைத்தல் செலவினமாக குறிப்பிடப்பட்டிருந்தது. அதற்கிணங்க, மீளாய்வு ஆண்டின் பற்றாக்குறை மற்றும் திரட்டிய நிதி என்பன மிகையாக குறிப்பிடப்பட்டிருந்தது.

- இறக்குமதி செய்யப்பட்ட அரிசி கருத்திட்டம் தொடர்பில் 2017 ஆம் ஆண்டில் செலுத்தப்பட்ட கட்டுப்பாட்டு மற்றும் முகவர் கட்டணங்களில் இருந்து கூ.மொ.தா இற்கு திருப்பிச் செலுத்தப்பட வேண்டிய தொகையான ரூ. 6,028,355, ஆனது மீளாய்வாண்டில் வருமானமாக இனங்காணப்பட்டுள்ளதுடன் அதனைத் தொடர்ந்து மீளாய்வு ஆண்டில் பற்றாக்குறை மற்றும் திரட்டிய நிதி என்பன குறைத்துக் குறிப்பிடப்பட்டுள்ளது.

(i) இ.க.நி. 16:- பொறித் தொகுதி, ஆதனம் மற்றும் உபகரணம்

- ஒரு சொத்தின் எஞ்சிய மதிப்பு மற்றும் பயனுள்ள ஆயுட்காலம் என்பன குறைந்தபட்சம் ஒவ்வொரு நிதியாண்டின் முடிவிலும் மீளாய்வு செய்யப்படுதல் வேண்டும், மேலும் எதிர்பார்க்கப்படும் சூழ்நிலைகளில் மேற்கூறிய மீளாய்வுகளிலிருந்து , அவை வேறுபட்டால், அத்தகைய வேறுபாடு இ.க.நி. 08 இன் படி கணக்கீட்டு மதிப்பீட்டில் உள்ள வேறுபாடாகக் கணக்கிடப்படும். எவ்வாறாயினும், 2018 டிசம்பர் 31 இல் ரூ. 535,560,027 இல் பதிவளிப்புச் செய்யப்பட்ட கட்டிடங்களின் எஞ்சிய மதிப்பு மற்றும் பயனுள்ள நேரம், குத்தகைக்கு விடப்பட்ட நிலங்களில் உள்ள கட்டிடங்களின் மறுசீரமைப்பு, இயந்திரங்கள், மோட்டார் வாகனங்கள், தளபாடங்கள் மற்றும் சாதனங்கள், அலுவலக உபகரணங்கள், கணினிகள் மற்றும் கணினி துணைக்கருவிகளின் மதிப்பானது மீளாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

- 19 இயந்திரங்கள், 74 தளபாடங்களும் பொருத்துக்களும், 94 மோட்டார் வாகனங்கள், 14 பொருத்துக்களும் உபகரணங்களும், 149 அலுவலக உபகரணங்கள் மற்றும் 50 கணனி மற்றும் கணனி துணை பொருட்களின் பெறுமதியானது முழுமையாக தேய்மானமளிக்கப்பட்டுள்ளதுடன் தற்போது வரையில் பயன்படுத்தப்பட்டு வருவன குறித்து நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ii) இ.க.நி. 37 – ஏற்பாடுகள், எதிர்பாராத பொறுப்புக்கள் மற்றும் எதிர்பாராத சொத்துக்கள்

(அ) மேற்கூறிய நியமத்திற்கிணங்க, நிதிக் கூற்றுக்களில் நிறுவனமானது எதிர்பாராத சொத்துக்களை அடையாளம் காணக் கூடாது என்ற போதிலும், இறக்குமதி செய்யப்பட்ட அரிசி திட்டத்தின் கீழ் இடம்மாறியமை தொடர்பாக கேள்விப்பட்ட வருவதிலிருந்து பெறப்படுவதற்கு எதிர்பார்க்கப்படும் ரூ. 25,900,236/- பெறுமதியுடைய சொத்துக்கள் நிதிக் கூற்றுக்களில் அடையாளம் காணப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2018 டிசம்பர் 1 ஆம் திகதியிலுள்ளவாறு கட்டிடத் திணைக்களத்தின் கையிருப்பாக நிதிக் கூற்றுக்களில் பதிவு செய்யப்பட்டிருந்த ரூபா.4,143,032 தொகையுடைய கட்டிடப் பொருட்கள் 2004 ஆம் ஆண்டிலிருந்து நிதிக் கூற்றுக்களில் பதிவு செய்யப்பட்டுள்ள போதிலும், அதன் பௌதீக நீடித்து நிலைத்திருக்கும் தன்மையானது கணக்காய்வுச் சான்றினூடாக தாபிக்கப்பட்டிருக்கவில்லை. அதற்கிணங்க, 2018 டிசம்பர் 1 ஆம் திகதியிலுள்ளவாறான இருப்பு மீதியானது மிகையாக குறிப்பிடப்பட்டிருந்தது.

(இ) கூ.மொ.தா மற்றும் சதொச மோட்டர்ஸ் என்பவற்றின் தலைமை அலுவலகம் அமைந்துள்ள காணியின் பெறுமதி மீள் மதிப்பீடு செய்யப்பட்ட போதிலும், அதன் பெறுமதியானது ரூபா.2,621,600,000 ஆக கணக்கில் சேர்க்கப்பட்டிருந்தது. அதனைத் தொடர்ந்து, காணிகள் மற்றும் முதலீட்டு ஆதனங்கள் என்பன ரூபா.20,600,000 இனால் மிகையாக குறிப்பிடப்பட்டிருந்தது.

(ஈ) மாத்தறையில் அமைந்துள்ள களஞ்சியங்களின் மீள் மதிப்பீட்டுப் பெறுமதியானது 2944 சதுர அடியானது ரூபா.,532,800 என மீள் மதிப்பீடு செய்யப்பட்ட போதிலும், அது ரூபா.1,177,600 ஆக கணக்குகளில் சேர்க்கப்பட்டிருந்தது. எனவே, கட்டிடங்களின் பெறுமதியானது ரூபா.2,355,200 இனால் குறைத்து காட்டப்பட்டிருந்தது.

(உ) ரூபா.112,943,520 பெறுமதியில் ஹிங்குராகொட கட்டிடமொன்றினை மேம்படுத்துவதற்கான 15 உருப்படிகள் ரூபா.68,68,000 என கணக்குகளில் சேர்க்கப்பட்டிருந்தமையால், கட்டிட மேம்பாட்டுக் கணக்கின் மீதியானது ரூபா.44,075,520 இனால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. அதற்கிணங்க, குறித்த ஆண்டின் தேய்மானமளிக்கப்பட்ட பெறுமதி ரூபா.1,763,021 தொகையினால் குறைத்து கணக்கிடப்பட்டிருந்தது.

(ஊ) கூ.மொ.தா ஆனது லங்கா சதொச லிமிட்டடின் பங்குகளின் பங்களிப்புக்காக நிதி ரீதியாக பங்களிப்புச் செய்யப்பட்டிருக்கவில்லை என்பதுடன் கூ.மொ.தா இனால் லங்கா சதொசவிற்கு அளிக்கப்பட்டிருந்த ரூபா.5,72,222 பெறுமதியுடைய நிலையான சொத்துக்கள் மற்றும் கூ.மொ.தா இனால் லங்கா சதொச லிமிட்டட்டுக்கு குத்தகைக்கு விடப்பட்டிருந்த கட்டிடங்களின் மூலம் 2005 இலிருந்து 2011 வரையிலான காலப்பகுதிக்கான சேர்ந்த வாடகையான ரூபா.66,986,483 இல் ரூபா.121,708,711 கொடுப்பனவு செய்யப்பட்டது. இத்தொகையில், லங்கா சதொசவினால் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த ரூபா. 22,798,840 தொகையானது மீளாய்வு ஆண்டின் நிதிக் கூற்றுக்களில் முதலீடுகளாக குறிப்பிடப்பட்டிருந்ததுடன் மீதித் தொகையான

ரூபா.s.98,909,871 ஆனது நிதிக் கூற்றுக்களில் நீண்ட கால சொத்துக்களின் கீழ் முதலீட்டு முற்பணமாக குறிப்பிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், லங்கா சதொச லிமிட்டட் ஆனது லங்கா சதொச லிமிட்டடின் நிதிக் கூற்றுக்களில் இது தொடர்பில் எவ்வித ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை எனக் குறிப்பிட்டுள்ளது.

(எ) மீளாய்வு ஆண்டு காலப்பகுதியில் 09 நிறுவனங்களிடமிருந்து கூ.மொ.தா. இனால் பெற்றுக் கொள்ளப்பட்ட கட்டிட வாடகை வருமானத்துடன் தொடர்புடைய பிடித்து வைத்த வரியான ரூபா. 5,645,127 மொத்த தொகையானது கணக்கில் சேர்க்கப்பட்டிருக்கவில்லை என்பதுடன் அதனை வரவு வைப்பதற்குப் பதிலாக நிறுத்தி வைத்தல் வெளியீட்டுக் கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்த 03 நிறுவனங்களிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட வாடகை மீது ரூபா.2,85,10 இனை கணக்கில் நிறுத்தி வைக்கும் போது, நிறுத்தி வைத்தல் வெளியீட்டு கணக்கு மீதியானது ரூபா.10,815,47 இனால் குறைத்து குறிப்பிடப்பட்டிருந்தது.

(ஏ) 2018, டிசம்பர் 1 இலுள்ளவாறு நிலையான சொத்துக்களின் மீதி தொடர்பில் காசு மற்றும் காசுக்குச் சமமானவற்றின் மீதியில் ரூபா.19,422,155 தொகையுடைய நிலையான சொத்துக்கள் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், குறித்த திகதியில் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின்படி, நிலையான சொத்துக்களின் மீதியானது ரூபா. 18,382,415 ஆக இருந்துள்ளதுடன் மீதி நிலையான சொத்துக்கள் ரூபா. 1,039,740 இனால் அதிகமாக காட்டப்பட்டிருந்தது.

(ஏ) மீளாய்வு ஆண்டுடன் தொடர்புடைய ரூபா.2,880,430 தொகையுடைய நிலையான சொத்துக்கள், தவணை வைப்புக்கள் மற்றும் சேமிப்பு வைப்புக்களின் வட்டி வருமானமானது இனணங்காணப்பட்டிருக்காமல் மீளாய்வு ஆண்டின் வருமானமாக கணக்கில் சேர்க்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க, மீளாய்வு ஆண்டுக்கான வட்டி வருமானம் மற்றும் வருமதி வட்டி என்பன குறைத்து பதிவிடப்பட்டிருந்தது.

(ஐ) கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்ட தகவலின்படி, வாடகை வருமானமானது ரூபா.229,528,611 ஆக இருந்த போதிலும், நிதிக் கூற்றுக்களின்படி அது ரூபா.230,716,982 ஆகவே இருந்துள்ளதுடன் ரூபா.1,188,371 வித்தியாசம் அவதானிக்கப்பட்டது.

(ஒ) நேரடி அனுப்புதலாக கூமொதா இன் நடைமுறைக் கணக்கிற்கு கிடைக்கப் பெற்ற ரூபா.8,684,772 இனைக் கொண்ட வைப்புத் தொகையானது உரிய கணக்குகளில் இனங் காணப்பட்டு பதிவு செய்வதற்குப் பதிலாக, வர வேண்டிய வாடகை மீதிகளாக கழிப்பனவு செய்யப்பட்டு இனங்காணப்படாத வைப்புக்களாக நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டிருந்தது.

(ஓ) இருப்பு நட்டங்களாக அரிசி இறக்குமதி கருத்திட்டத்துடன் தொடர்புடைய 377,175.5 கிலோ கிராமினைக் கொண்ட ரூபா.25,900,236 தொகையினை இனங் காண்பதற்குப் பதிலாக, அரிசி இறக்குமதி கருத்திட்டத்தின் நட்டமானது ரூபா.51,800,472 இனால் குறைத்து பதிடப்பட்டிருந்த்து.

(ஒள) மீளாய்வு ஆண்டின் இறுதியில் சரக்கிருப்பில் உள்ளடக்கப்பட்டிருந்த ரூபா.1,855,609 மொத்த தொகையினைக் கொண்ட பயன்படுத்த முடியாத இறுதி இருப்புக்கள், சேதமடைந்த பொருட்களாக அவற்றினை இனங் கண்டு அவை உள்ளடக்கப்பட்டிருக்காமையால், 2018 டிசம்பர் 31 இலுள்ளவாறான இருப்புக்களின் பெறுமதியானது மிகையாக குறிக்கப்பட்டிருந்தது.

(ஃ) அதனைத் தொடர்ந்து அரிசி கையிருப்பு ரூ.9,660,966 ஆனது அரிசி இறக்குமதித் கருத்திட்டத்தின் கீழ் கொள்முதல் செலவாகக் கணக்கிடப்பட்டு இறக்குமதி செய்யப்படாமல் இருந்ததால், திட்டக் கண்காணிப்பு நிறுவனம் அந்தத் தொகையை கூ.மொ.தா இற்கு திருப்பி அளித்துள்ளது. அதை வாங்கும் செலவில் இருந்து நீக்குவதற்குப் பதிலாக, அது ஏனைய வருமானமாக அடையாளம் காணப்பட்டதன் காரணமாக திட்டத்தின் கொள்முதல் செலவு அதிகமாக குறிப்பிடப்பட்டிருந்தது.

(க) ஹிங்குராகொட மற்றும் பண்ணேகமுவ களஞ்சியங்களில் களஞ்சியப்படுத்தி வைக்கப்பட்டிருந்த 47,294 கிலோ கிராம் அரிசி இருப்பின் பெறுமதியானது 2018 டிசம்பர் 31 வரையில் கணக்குகளில் சேர்க்கப்பட்டிருக்கவில்லை.

(கா) நகர திறைசேரி திணைக்களத்திற்குச் செலுத்தப்பட வேண்டிய ரூபா.79,663,828 தொகையானது ரூபா.71,984,473 என கணக்குகளில் சேர்க்கப்பட்டிருந்தமையால் மதிப்பீட்டு வரியானது ரூபா.7,679,355 இனால் குறைத்து மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது.

(கி) வங்கியால் வெளியிடப்பட்ட ஆவணத்தின்படி, 2018 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதி செலுத்தப்பட வேண்டிய அரிசி இறக்குமதித் திட்டத்திற்காக மக்கள் வங்கியிடமிருந்து பெறப்பட்ட கடன் வசதிக்கான திரண்ட வட்டி ரூபா. 50,590,969 ஆக இருந்துள்ளதுடன் இது ரூபா 40,412,162 ஆக கணக்குகளில் சேர்க்கப்பட்டிருந்தது. எனவே, ஆண்டுக்கான சேர்ந்த வட்டி மற்றும் வட்டிச் செலவினமானது ரூபா. 10,178,807 இனால் குறைத்து பதியப்பட்டிருந்தது..

(கு) சில கடன் பட்டோர்களின் மீதிகள் மற்றும் கடன் பட்டோர்களின் மீதிகள் எதிர் மறை மீதிகளாக நிலுவைகளாகக் கூறப்பட்டுள்ளதால், மீளாய்வு ஆண்டின் இறுதியில் பெறத்தக்க மற்றும் செலுத்த வேண்டிய நிலுவைகள் முறையே ரூபா. 7,760,946 மற்றும் ரூபா. 25,647,657 இனால் குறைத்து பதியப்பட்டுள்ளன.

(கூ) பின்வரும் அவதானங்கள் திரண்ட நிதிக் கூற்றுக்களினைத் தயாரிப்பது தொடர்பில் மேற்கொள்ளப்பட்டன.

(i) கூ.மொ.தா இன் திரண்ட நிதிக் கூற்றுக்களினைத் தயாரிக்கும் போது, அங்கீகரிக்கப்பட்டிருக்காத நிதிக் கூற்றுக்கள் மற்றும் கூ.மொ.தா இன் துணைக் கம்பனிகளின் பணிப்பாளர் சபையினால் கணக்காய்வு செய்யப்பட்ட, மற்றும் கூ.மொ.தா பொருளாதார நிலையங்கள் சேவைகள் லிமிட்டட் மற்றும் கூ.மொ.தா

நிருமாண மற்றும் பொறியியல் (தனியார்) லிமிட்டட் என்பன பயன்படுத்தப்பட்டிருந்தன.

(ii) கூ.மொ.தா நிருமாண மற்றும் பொறியியல் (தனியார்) லிமிட்டடின் நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டிருந்த ரூபா.99,000 தொகையுடைய கற்பனைச் சொத்துக்கள் திரண்ட நிதிக் கூற்றுக்களிலுள்ள ஆதனம், பொறி மற்றும் உபகரணம் என்பவற்றின் கீழ் குறிப்பிடப்பட்டிருந்தது.

(iii) கூ.மொ.தா இன் பாதுகாப்பு செலவான ரூபா.21,787,903 ஆனது நிதிக் கூற்றுக்களின் நிருவாக செலவுகளின் கீழ் காட்டப்பட்டிருந்ததுடன் 02 துணைக் கம்பனிகளின் நிதிக் கூற்றுக்களின்படி, பாதுகாப்பு செலவுகள் 02 துணைக் கம்பனிகளின் நிதிக் கூற்றுக்களின்படி குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. கூ.மொ.தா பொருளாதார நிலையங்கள் சேவைகள் (தனியார்) லிமிட்டடிடமிருந்து கூ.மொ.தா இனால் பெற்றுக் கொள்ளப்பட்ட வருமானமானது நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், திரண்ட நிதிக் கூற்றுக்களின்படி, குழுமத்தின் பாதுகாப்பு செலவானது ரூபா.3,263,542 இனால் எதிர் மறைப் பெறுமதியினைக் கொண்டிருந்தது.

(iv) கூ.மொ.தா இன் நிதிக் கூற்றுக்களின்படி, அதன் 2 துணைக் கம்பனிகளின் வியாபார ஏனைய பெறத்தக்கவைகளின் மொத்த மீதியானது 2018 டிசம்பர் 31 இலுள்ளவாறு ரூபா.721,435,806 ஆக இருந்துள்ள போதிலும், திரண்ட நிதிக் கூற்றுக்களின் படி, ரூபா.721,525,003 ஆக இருந்துள்ளதுடன், ரூபா.721,525,003 ஆனது வேறுபாடாக இருந்துள்ளமையானது அவதானிக்கப்பட்டது.

(v) கூ.மொ.தா மற்றும் இரண்டு துணைக் கம்பனிகளின் நிதிக் கூற்றுக்களின்படி, மீளாய்வு ஆண்டின் நிருவாகச் செலவுகளின் மொத்தத் தொகை ரூ. 398,884,845 அக இருந்த போதிலும், திரண்ட நிதிக் கூற்றின்படி ரூபா. 369,256,211 என காணப்பட்டமையால், வித்தியாசமாக ரூபா.29,628,634 அவதானிக்கப்பட்டது.

(கெ) 2018 டிசம்பர் 31 இன் இறுதியிலுள்ளவாறு ரூபா. 2,416,485,545 பெறுமதியில் பின்வரும் கணக்கீட்டு மீதிகள் தொடர்பான சான்றுகள் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்காமையால் இதனை அவதானிக்க முடிந்திருக்கவில்லை என்பதுடன் அதனை திருப்திகரமான முறையிலும் ஏற்றுக் கொள்ள முடியவில்லை.

	விடயம்	பெறுமதி (ரூபா.)	சான்று
(i)	திறைசேரிக்குச் செலுத்த வேண்டியவைகள்	98,718,402	நிதி நிறுவனத்திற்கு திறைசேரியினால் தீர்க்கப்பட்ட கடனை உறுதிப்படுத்தும் ஆவணங்கள்.
	SRL-கடன்கொடுத்தோர்கள்	655,000,000	பெறுமதியினை உறுதிப்படுத்தும் ஆவணங்கள்
	வங்கிப் பொறுப்புக்கள்	225,000,000	பெறுமதியினை உறுதிப்படுத்தும் ஆவணங்கள்
	பெற்றுக் கொள்ளப்பட்ட விற்பனைப் பெறுமதி	680,000,000	பெற்றுக் கொள்ளப்பட்ட விற்பனைப் பெறுமதியினை உறுதிப்படுத்தும் ஆவணங்கள்
(ii)	ஏனைய கடன்பட்டோர்கள் – கமட்ட சவிய கருத்திட்டம்	42,568,994	விலைவிபர பட்டியல்கள், பற்றுச்சீட்டுக்கள்
(iii)	நீண்ட கால வியாபார கடன்பட்டோர் மீதி	3,519,166	விலைவிபர பட்டியல்கள், கொடுப்பனவு விபரங்கள், கால ரீதியான பகுப்பாய்வு
(iv)	நீண்டகால வியாபார கடன்கொடுத்தோர் மீதி	187,678,063	விலைவிபர பட்டியல்கள், கொடுப்பனவு விபரங்கள், கால ரீதியான பகுப்பாய்வு
(v)	செலுத்த வேண்டிய பெசேவ	150,812,239	கணிப்பீடுகளும் கொடுப்பனவுகளும்
(vi)	செலுத்த வேண்டிய நடைமுறை வரி	161,833,614	கணிப்பீடுகளும் கொடுப்பனவுகளும்
(vii)	நீண்ட கால வைப்புக்கள் மற்றும் முற்பணங்கள்	29,692,440	வைப்புக்களின் பெறுகைகள்
(viii)	2018 ஜனவரியிலுள்ளவாறான பெறத்தக்க வட்டி கணக்கு மீதி	3,851,521	நிலையான வைப்புக்கள் தொடர்பில் உரிய வங்கியிடமிருந்து கிடைக்கப்பெற்ற புதுப்பிக்கத்தக்க அறிவித்தல்கள்.
(ix)	நிலையான வைப்புக்கள் மீதி	5,882,416	வங்கியிடமிருந்து பெறப்பட்ட நிலையான வைப்புக்களின் சான்றிதழ்கள் மற்றும் புதுப்பிக்கத்தக்க

			அறிவித்தல்கள்
(x)	ஏனைய முதலீடுகள்	171,928,690	முதலீட்டுப் பெறுமதியினை
	கூமொதா சில்லறை லிமிட்டட்		உறுதிப்படுத்தும் ஆவணங்கள்
	மொத்தம்	**2,416,485,545**	

(கே) விற்பனை செய்யப்பட்ட அரிசி தொடர்பான தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமையால், உள்ளூர் அரிசி கருத்திட்டம் தொடர்பில் கணக்கிடப்பட்ட சராசரி கசிவானது ரூபா. 96,463,820 ஆக இருந்துள்ளதுடன் மீளாய்வு ஆண்டின் அரைத்தல் செலவான ரூபா.329,400,769 இன் சரியான தன்மையினை உறுதிப்படுத்த முடியவில்லை.

(கு) மீளாய்வு ஆண்டின் இறுதியில் மொத்த பொறுப்புகளின் பெறுமதியானது மொத்தப் சொத்துக்களை விஞ்சியதாக ரூபா. 1,316,339,940 ஆக காணப்பட்டுள்ளதுடன் கூ.மொ.தா இன் நடைமுறைப் பொறுப்புக்களின் மிதியானது நடைமுறைப் பொறுப்புக்களை விஞ்சிய வகையில் மீளாய்வு ஆண்டின் இறுதியில் ரூபா.2,866,385,344 ஆக காணப்பட்டுள்ளமையால் கூ.மொ.தா இன் பொறுப்புக்களை அதன் சொத்துக்களைக் கொண்டு திறைசேரியின் ஏற்பாடுகளினைப் பெற்றுக் கொள்ளாமல் ஈடு செய்யக் கூடிய நிலையில் இருப்பது அவதானிக்கப்பட்டது. வங்கி கடன் நிலுவை ரூ. 12,274,007,746 மற்றும் சிறப்பு திட்டங்களுக்கான கொடுப்பனவுகள் இந்த நிலைமைக்கு முக்கிய காரணமாக அமைந்திருந்தது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வை மேற்கொண்டேன். எனது பொறுப்புகள், அந்தந்த நியமங்களின் கீழ், எனது அறிக்கையின் நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வுக்கான கணக்காய்வாளரின் பொறுப்புகளில் மேலும் விவரிக்கப்பட்டுள்ளன. எனது தகுதிவாய்ந்த கருத்துக்கான அடிப்படையை வழங்க நான் பெற்ற கணக்காய்வு சான்றுகள் போதுமானவையாகவும் பொருத்தமானவையாகவும் இருப்பதாக நான் நம்புகிறேன்.

1.3 நிருவாகத்தின் பொறுப்புகள் மற்றும் நிதிக் கூற்றுக்களுக்கான ஆளுகைக்கு பொறுப்பானவர்கள்

இலங்கை அரச கணக்கியல் நியமங்களுக்கு இணங்க இந்த நிதிக் கூற்றுக்ககளை தயாரித்தல் மற்றும் நியாயமான முறையில் சமர்ப்பித்தல் என்பன முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். மற்றும் மோசடி மற்றும் தவறின் காரணமாக காரணமாக இருந்தாலும் தவறான அறிக்கைகளிலிருந்து விடுபட்ட நிதிக் கூற்றுக்களை தயாரிப்பதை செயற்படுத்துவதற்கு நிருவாகம் தீர்மானிப்பது போன்ற உள்ளகக் கட்டுப்பாடு அவசியமாகும்.

நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவனத்தின் தொடர்ச்சியான செயற்பாட்டின் திறனைக் கண்டறிவது நிருவாகத்தின் பொறுப்பாகும், மேலும் நிருவாகமானது நிறுவனத்தை கலைக்க முடிவு செய்தால் அல்லது வேறு மாற்று வழி இல்லாத நிலையில் செயல்பாடுகளை நிறுத்த நடவடிக்கை எடுக்காவிட்டால், நிருவாகமானது தொடர்ச்சியான தொழிற்பாட்டின் அடிப்படையிலான கணக்கீடு மற்றும் நிறுவனத்தின் எதிர்காலத்தில் நிலையான தொழிற்பாடு குறித்த விடயங்களை வெளிப்படுத்துவதற்கு பொறுப்பு வாய்ந்ததாகும்.

நிருவாகத்தின் மீது குற்றம் சாட்டப்பட்டவர்கள், தாபனத்தின் நிதி அறிக்கை செயல்முறையை மேற்பார்வையிடுவதற்கு பொறுப்பாவார்கள்.

2018 ஆம் ஆண்டின் தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் உப பிரிவு 16(1) இன் படி, நிதியமானது கூ.மொ.தா இன் வருடாந்த மற்றும் காலப்பகுதிக்குரிய நிதிக் கூற்றுகளினைத் தயாரிப்பதற்குத் தேவையான அதன் வருமானம், செலவுகள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் ஆகியவற்றின் முறையான புத்தகங்கள் மற்றும் பதிவுகளைப் பேணுதல் வேண்டும்.

1.4 நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வுக்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்.

மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக் கூற்றுக்கள் ஒட்டுமொத்தமாக தவறான அறிக்கையிலிருந்து விடுபட்டுள்ளதா என்பதைப் பற்றிய நியாயமான உத்தரவாதத்தைப் பெற்று, எனது கருத்தை உள்ளடக்கியதான கணக்காய்வாளர் அறிக்கையை வெளியிடுவதே எனது நோக்கமாகும். நியாயமான உத்தரவாதம் என்பது ஒரு உயர் மட்ட உத்தரவாதமாகும், ஆனால் இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு அமைய நடத்தப்படும் கணக்காய்வானது, அது நிலைத்திருக்கும் போது எப்பொழுதும் பொருள் தவறாகக் கண்டறியப்படும் என்பதற்கான உத்தரவாதம் அல்ல. தவறான அறிக்கைகள் மோசடி அல்லது தவறிலிருந்து ஏழலாம், மேலும் அவை தனித்தனியாகவோ அல்லது மொத்தமாகவோ, இந்த நிதிக் கூற்றுக்களின் அடிப்படையில் எடுக்கப்பட்ட பயனர்களின் பொருளாதார முடிவுகளை நியாயமான முறையில் பாதிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கமைவான கணக்காய்வின் பகுதி என்ற வகையில், நான், தொழில்சார் தீர்ப்பினை வழங்குவதுடன் கணக்காய்வினூடாக தொழில்சார் ஐயப்பாட்டினையும் பேணி வருகின்றேன்:

- மோசடி அல்லது பிழையின் காரணமாக, நிதிநிலை அறிக்கைகளின் தவறான அறிக்கையின் அபாயங்களைக் கண்டறிந்து மதிப்பீடு செய்தல், அந்த இடர்களுக்குப் பதிலளிக்கும் வகையில் கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்து செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்துக்கான அடிப்படையை வழங்க போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெறுதல், கூட்டுச் சதி, மோசடி, வேண்டுமென்றே புறக்கணிப்பு, தவறான விளக்கங்கள் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை மீறுதல் போன்றவற்றை

உள்ளடக்கியதான, மோசடியின் விளைவாக ஏற்படும் தவறான அறிக்கையைக் கண்டறியாத ஆபத்தானது, பிழையின் விளைவாக ஏற்படும் ஒன்றை விட அதிகமானதாகும்.

- கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக தணிக்கைக்குப் பொருத்தமான உள்ளக கட்டுப்பாடு பற்றிய புரிதலைப் பெறுதல் ஆனால் அதிகாரத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் செயல்திறன் பற்றிய கருத்தை வெளிப்படுத்தும் நோக்கத்திற்காக அல்ல.
- பயன்படுத்தப்படும் கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் நிருவாகத்தினால் செய்யப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்துகைகளின் சரியான தன்மையை மதிப்பாய்வு செய்தல்.
- பெறப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளின் அடிப்படையில் கணக்கீட்டினைப் பயன்படுத்துவதன் சரியான தன்மையை முடிவு செய்தல், நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்பான ஒரு பொருள் நிச்சயமற்ற தன்மை நிலவுகிறதா, என்பது குறித்து தொடர்ந்து செல்லும் நிறுவனம் குறித்த திறனைப் பற்றி குறிப்பிடத்தக்க சந்தேகத்தை ஏற்படுத்தலாம். ஒரு நிச்சயமற்ற தன்மை இருப்பதாக நான் முடிவு செய்தால், நிதிநிலை அறிக்கைகளில் உள்ள தொடர்புடைய வெளிப்படுத்துகைகள் அல்லது அத்தகைய வெளிப்படுத்துகைகள் போதுமானவையாக இல்லாவிட்டால், எனது கருத்தை மாற்றுவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையில் கவனம் செலுத்துதல் வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தாபனத்தை தொடர்ந்து செல்லும் ஒரு நிறுவனமாக தொழிற்படுவதனை தடுப்பதற்கான காரணமாக அமையலாம்.
- வெளிப்படுத்துகைகள் உள்ளடங்கலான நிதிநிலை அறிக்கைகளின் ஒட்டுமொத்த செயல் விளக்கங்கள், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கம் மற்றும் நிதிநிலை அறிக்கைகள் நியாயமான செயல் விளக்கங்களை அடையும் விதத்தில் அடிப்படை பரிவர்த்தனைகள் மற்றும் நிகழ்வுகளை பிரதிநிதித்துவப்படுத்துகின்றனவா என்பதை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது நான் கண்டறிந்த உள்ளக கட்டுப்பாட்டில் உள்ள குறிப்பிடத்தக்க குறைபாடுகள் உள்ளடங்கலான, குறிப்பிடத்தக்க கணக்காய்வு காண்புகள் தொடர்பில் ஏனைய விடயங்களின் ஆளுகைக்கு பொறுப்பானவர்களுடன் நானும் தொடர்பு கொள்கிறேன்.

2. ஏனைய சட்ட மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இல. தேசிய கணக்காய்வுச் சட்டமானது பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பான விசேட ஏற்பாடுகளனைக் கொண்டுள்ளது.

- நான், 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 12(அ) இன் தேவைப்பாடுகளின் நோக்கத்திற்காக அனைத்து தகவல்கள் மற்றும் விளக்கமளிப்புக்களினைப் பெற்றுள்ளதுடன் எனது பரிசோதனைகளிலிருந்து நிறுவனத்தினால் உரிய முறையில் நிதிசார் பதிவேடுகள் பேணப்பட்டுள்ளன என்பது தெரிய வந்துள்ளது.

- 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இல. தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 6(1)(ஈ) (iii) இன் தேவைப்பாடுகளின்படி, முன்னைய ஆண்டிற்கு இணங்கிய வகையில் நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.
- 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இல. தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 6(1)(ஈ) (iv) இன் தேவைப்பாடுகளின்படி, முன்னைய ஆண்டில் என்னால் வழங்கப்பட்ட ஏதேனும் பரிந்துரையானது நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருந்தது.

ஏற்றுக்கொள்ளப்பட்ட நடைமுறைகள் மற்றும் பெறப்பட்ட ஆதாரங்களின் அடிப்படையில், பொருள் சார்ந்த விஷயங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட, பின்வரும் அறிக்கைகளை வெளிப்படுத்த எதுவும் எனது கவனத்திற்கு கொண்டு வரப்படவில்லை.

- 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இல. தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 12(ஈ) இன் தேவைப்பாடுகளின்படி, நிறுவனத்தின் செயற்குழுவின் எவரேனும் உறுப்பினர் சாதாரண வியாபார செயற்பாடுகளுக்கப்பால் கூ.மொ.தா இனால் மேற்கொள்ளப்படும் ஒப்பந்தத்தில் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ சார்ந்திருத்தல்.

- 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இல. தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 12(ஊ) இன் தேவைப்பாடுகளின்படி, கீழே குறிப்பிடப்பட்ட அதவானங்கள் நீங்கலாக, கூ.மொ.தா ஆனது ஏதேனும் ஏற்புடையதான எழுத்து மூல சட்ட விதி அல்லது தாபனத்தின் செயற்குழுவினால் வழங்கப்பட்ட வேறு ஏதேனும் பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் இணங்கியிருக்காமை.

சட்டங்கள் மற்றும் பணிப்புரைகளுக்கான உசாத்துணை	**விபரணம்**
(அ) இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் ஒழுங்குவிதிகள்	ரூபா.6,938,866 தொகையுடைய வவுச்சர்களுக்கான கொடுப்பனவுகள் உரிய அங்கீகாரம் மற்றும் சான்றுப்படுத்தலின்றி 32 தடவைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும், மேலும்,
(i) நி.பி. 137 மற்றும் 138	அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் ஒருவரின் அங்கீகாரமின்றி ரூபா.40,757,032 பெறுமதியுடைய வவுச்சர்களுக்கான கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
(ii) நி.பி. 189	இறக்குமதி செய்யப்பட்ட அரிசி கொள்வனவுக்காக நிறுவனமொன்றினால் வழங்கப்பட்டிருந்த ரூபா.478,700,000 பெறுமதியுடைய 23 முற்தேதியிடப்பட்ட காசோலைகள்

		மதிப்பிழந்துள்ளதுடன் அத்தகைய காசோலைகள் தொடர்பில் கூ.மொ.தா இனால் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட் டிருக்கவில்லை.
(iii)	நி.பி. 395 (இ)	வங்கிக்கணக்கிணக்க கூற்றுக்கள் அடுத்து வரும் மாதத்தின் 15 ஆம் திகதிக்கு முன்பாக தயாரிக்கப்பட்டிருக்க வேண்டியிருந்த போதிலும், 08 வங்கிக் கணக்குகள் தொடர்பில் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

- 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இல. தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 12(எ) இன் தேவைப்பாடுகளுக்காக, நிறுவனத்தின் தத்துவங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளுக்கெதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

- நிதியமானது, 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இல. தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 12(ஏ) இன் நோக்கத்திற்காக, குறித்த காலப்பகுதியில் சிக்கனமானதும், வினைத்திறன் வாய்ந்ததும் பயனுறுதி வாய்ந்ததுமான பெறுகைகள் நடைமுறையினை செயற்படுத்தியிருக்கவில்லை.

2.3 ஏனைய கணக்காய்வு அவதானங்கள்

(அ) கூ.மொ.தா ஆனது அதன் ஆதனங்களை மதிப்பீட்டு அறிக்கையின் சந்தைப் பெறுமதியிலும் பார்க்க குறைந்த பெறுமதியில் குத்தகைக்கு விட்டிருப்பதால், ரூபா.22,429,875 ஆனது வருமான இழப்பாக ஏற்பட்டுள்ளது.

(ஆ) மீளாய்வு ஆண்டில் ரூபா.904,307 தொகையுடைய மாத வாடகையில் ஆதனத்துக்குரிய தவணைக் கட்டணம் எதனையும் கூ.மொ.தா இனால் 'அறவீடு செய்ய முடியாது போனமையால், டிசம்பர் 31 இலுள்ளவாறான கூமொ.தா இன் வருமதி வாடகையானது ரூபா. 8,975,350 ஆக இருந்துள்ளது.

(இ) மீளாய்வு ஆண்டின் ஜனவரியிலிருந்து டிசம்பர் வரையிலான காலப்பகுதியில் அரச நிறுவனம் அல்லது தனியார் கம்பனியொன்றுடன் உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திடாமல் போக்குவரத்து சேவைகளின் வழங்கல் தொடர்பில் முறையே ரூபா.30,470,718 மற்றும் ரூபா. 134,477,717 பெறுமதிகளில் விலைப்பட்டியல்கள் வழங்கப்பட்டுள்ளதுடன் மீளாய்வு ஆண்டு காலப்பகுதியில் எவ்வித பணமும் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஈ) வங்கி உத்தரவாதங்களுக்கு ரூ. அரிசியினை வழங்குவதற்காக கூ.மொ.தா இனால் தனியார் கம்பனியொன்றிடமிருந்து கடன் அடிப்படையில் ரூபா.100,000,000 பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளதுடன், குறித்த வங்கி உத்தரவாதங்கள் உண்மையானவையென உறுதிப்படுத்தாமல் இறக்குமதி செய்யப்பட்ட

அரிசியினை கூ.மொ.தா வழங்கியிருந்தது. மீளாய்வு ஆண்டின் டிசம்பர் 31 ஆம் திகதியின் இறுதியில் இந்த வங்கி உத்தரவாதங்கள போலியானவையென அடையாளங் காணப்பட்டுள்ளதுடன் கம்பனியிடமிருந்து வர வேண்டிய தொகை தொகை ரூ. 118,011,334 ஆகும்.

(உ) கூ.மொ.தா ஆனது எவ்வித உடன்படிக்கையும் மேற்கொள்ளப்படாமல் பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபைக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா.1,000,000 பெறுமதியான குறுகிய காலக் கடனையும் அதன் வட்டியினையும் அறவீடு செய்வதற்கும் மீளாய்வு ஆண்டின் டிசம்பர் 31 வரையில் எத்தகைய நடவடிக்கையினையும் எடுத்திருக்கவில்லை.

(ஊ) வங்கிப் பினை மட்டும் பெற்று, கடன் அடிப்படையில் அரிசி வழங்கும் உடன்படிக்கைக்கு மாறாக, தனியார் நிறுவனத்திற்கு கடன் அடிப்படையில் அரிசியை கூ.மொ.தா. விற்றுள்ளதுடன் அந்த நிறுவனத்திடமிருந்து ரூபா.5,574,811 பெற வேண்டியிருந்தது.

(எ) 2010 ஆகஸ்ட் 26 ஆம் திகதிய 2010/1753/34 ஆம் இல. சபைத் தீர்மானத்தின்படி, அப்போதைய கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சரின் அங்கீகாரத்துடன் 2007 பெப்ரவரி 01 ஆம் திகதியிலிருந்து பயனுறுதியாகும் வகையில் பதில் அடிப்படையில் செயற்பட்ட மூன்று நிறைவேற்று உத்தியோகத்தர்களை உறுதிப்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்ட போதிலும், கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தகம், அமைச்சரின் அங்கீகாரத்தினை வழங்கும் கடிதங்களின் மூலப் பிரதிகள் மேற்படி அதிகாரிகளின் சுய விபர கோவைகளுடன் இணைக்கப்பட்டிருக்கவில்லை. அப்போதைய பணிப்பாளர் சபையின் தீர்மானத்தின்படி ரூ. 11,511,088 தற்போதைய பணிப்பாளர் சபை மற்றும் தலைவரின் அனுமதியின்றி 08 வருடங்களின் பின்னர் நிலுவையிலுள்ள சம்பளம் மற்றும் சம்பள அதிகரிப்பு என கணக்கிட்டு மேற்படி கொடுப்பனவுகளை செலுத்தியிருந்த உத்தியோகத்தர்களில் இரண்டு உத்தியோகத்தர்களும் இருந்துள்ளனர். மேலும் இந்த இரண்டு உத்தியோகத்தர்களும் கம்பனியின் தலைவரின் அங்கீகாரத்தினைப் பெறாமல் இடைநிறுத்தப்பட்ட காலத்திற்கான அவர்களின் சம்பளம் மற்றும் நிலுவைத் தொகையாக பல்வேறு சந்தர்ப்பங்களில் மொத்தமாக ரூபா.3,718,55 இனைப் பெற்றிருந்தார்கள்.

(ஏ) 2014 பெப்ரவரி 17 ஆம் திகதிய அரச நிதி சுற்றறிக்கை இல. 01/2014 இன்படி, கூ.மொ.தா இன் நோக்கு மற்றும் செயற்பணியினை அடைந்து கொள்வதற்காக 2017 இலிருந்து 2020 வரையிலான காலப்பகுதிக்காக ஒருங்கிணைந்த திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், இது ஏற்புடைய காலப்பகுதிக்கு ஏற்றவகையில் மீளாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஐ) முகாமைத்துவ மட்டத்திலிருந்து 21, முகாமைத்துவ உதவியாளர் மட்டத்திலிருந்து 51 மற்றும் முதநிலை மட்டத்திலிருந்து 247 உள்ளடங்கலாக 319 உத்தியோகத்தர்களைக் கொண்டதாக அங்கீகரிக்கப்பட்ட பதவியணி காணப்பட்ட

அதேவேளையில் மீளாய்வு ஆண்டின் டிசம்பர் 31 இல் 32 வெற்றிடங்களும் காணப்பட்டுள்ளதுடன் இவற்றுள் 09 பதவி வெற்றிடங்கள் முகாமைத்துவ மட்டத்திலும் காணப்பட்டன.

(ஒ) 2003 ஜூன் 02 ஆம் திகதிய பொது தொழில்முயற்சி நிறுவன சுற்றறிக்கை இல.பீஈடி /12 இன் பிரிவு 6.5.1 இன் படி, கூ.மொ.தா இன் நிதி நிலைமை அறிக்கைகள் மீளாய்வு ஆண்டு முடிவடைந்த 60 நாட்களுக்குள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும் என்ற போதிலும், ஆண்டின் நிதி அறிக்கைகள் மதிப்பாய்வின் கீழ் 2021 ஏப்ரல் 20 ஆம் திகதியன்று தணிக்கைக்காக சமர்ப்பிக்கப்பட்டதுடன் வரைபு வருடாந்த அறிக்கையானது சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

டபிள்யூ.பி.சி.விக்கிரமரத்ன
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

2021.11.23

கணக்காய்வாளர் தலைமை அதிபதி
தேசிய கணக்காய்வு அலுவலகம்

1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் பிரிவு 14(2) இ இன் நியதிகளின்படி 2018 டிசம்பர் 31 ஆம் திகதியிலுள்ளவாறான கூட்டுறவு மொத்த விற்பனை தாபனத்தின் நிதிக்கூற்றுக்களின் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

2.2.1 கூட்டுத்தாபனத்தின் நீடித்து நிலைத்திருக்கும் தன்மை

தாபனத்தின் தற்போதைய அக்கறைகள் தாபனத்தின் முகாமைத்துவத்தால் மதிப்பிடப்படுகிறது, மேலும் எதிர்பார்க்கப்படும் எதிர்கால இலக்குகளை அடைவதற்கான வர்த்தக நடவடிக்கைகளைத் தொடருவதற்கு, நிறுவனத்தின் கிடைக்கக்கூடிய வளங்களில் திருப்தி அடைய முடியும் என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

2017/2018 ஆம் ஆண்டுகளில், அரசாங்கத்தின் தேவையின் பேரில் கூட்டுறவு மொத்த விற்பனை தாபனத்திற்கு அரிசியை கொள்விலையிலும் பார்க்க குறைவான விலையில் இறக்குமதி செய்ய வேண்டிய நிலைமை ஏற்பட்டிருந்ததுடன் 2021 ஜூலை மாதத்திலிருந்து மக்கள் வங்கிக்கு செலுத்த வேண்டிய கடனை 60 தவணைகளில் செலுத்த திறைசேரி மூலம் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. தாபனத்திற்கு செலுத்த வேண்டிய தொகையை அறவீடு செய்வதற்கு சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேற்படி

திட்டத்தின் கீழ் கூ.மொ.தா இலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட அரிசிக்கான பணத்தை ா சதொச நிறுவனம் 2021.11.15 இலிருந்து மீளச் செலுத்த ஆரம்பித்துள்ளது.

ாகத்தின் வழமையான கவனமானது, கூட்டுத்தாபனத்தின் மீது உள்ளதுடன் திறைசேரி ும் வர்த்தக அமைச்சின் அறிவுறுத்தல்களின் பேரில், வளங்களை உச்சபட்சமாகப் ாபடுத்துவதற்கு சாத்தியமான ஒவ்வொரு முயற்சியும் எடுக்கப்பட்டு வருகின்றது என்பதை புடன் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.

ட. இலங்கை கணக்கீட்டு நியமகளுக்களுடன் இணங்காமை

இலங்கை கணக்கீட்டு நியமம் – LKAS 08 – கணக்கீட்டு கொள்கைகள், கணக்கீட்டு மதிப்பீடுகளில் மாற்றங்கள் மற்றும் தவறுகள்

ட்டுள்ள தகவலுடன் உடன்படுகின்றேன். அதன்படி, 2017ஆம் ஆண்டுக்கான அரைக்கும் கை ரூ. 290,802,512 / - ஆக இருந்துள்ளதுடன் அது 2018 இல் ரூபா.38,598,256.86. ஆக ்துள்ளது. கணிபீடு பற்றிய தகவல்கள் கணக்காய்வுக்கு குறித்துரைக்கப்பட்டுள்ளன. இது ர்பான சுருக்க அறிக்கை இணைப்பு 01 இல் தரப்பட்டுள்ளது.

இலங்கை கணக்கீட்டு நியமம் – LKAS 16 – ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்

கூட்டுறவு மொத்த விற்பனை தாபனமானது இலங்கை முழுவதிலும் பெருமளவிலான ஆதனங்களை வைத்திருக்கின்றது. அத்தகைய ஆதனங்கள் ஒவ்வொரு ஐந்து வருடங்களுக்கும் ஒரு பட்டயம் பெற்ற மதிப்பீட்டாளரால் மீள்மதிப்பீடு செய்யப்படுகிறது. இது தாபனத்தின் அனைத்து அசையும் மற்றும் அசையா சொத்துக்களின் எஞ்சிய மதிப்பு, பயனுள்ள ஆயுட்காலம் மற்றும் சந்தை மதிப்பு ஆகியவற்றையும் மதிப்பிடுகிறது. ஒவ்வொரு ஆண்டும் நாடு பூராகவுமுள்ள தாபனத்தின் சொத்துக்களை மீள்மதிப்பீடு செய்வதில் செலவழித்த நேரத்தையும் செலவையும் கருத்தில் கொண்டு, ஒவ்வொரு வருடமும் அதைச் செய்வது நடைமுறையில் சாத்தியமற்றது எனப் புலப்படுகின்றது. எனவே, கூ.மொ.தா. ஆனது 3-5 வருடங்களில் நிலையான சொத்துக்களை கணக்கீட்டு நியமங்களின்படி மீள்மதிப்பீடு செய்ய நடவடிக்கை எடுத்து வருகிறது. (ii) 2019 ஆம் ஆண்டிலிருந்து நிதிக் கூற்றுக்களில் முழுமையாக தேய்மானம் செய்யப்பட்ட நிலையான சொத்துக்களின் இருப்பு மதிப்பை வெளிப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

2019 ஆம் ஆண்டு முதல் நிதிக் கூற்றுக்களில் முழுமையாக தேய்மானம் செய்யப்பட்ட நிலையான சொத்துக்களின் இருப்பு மதிப்பை வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

2.2.3. கணக்கீட்டு குறைபாடுகள்

(அ) தாபனமானது ரூ. 60,000 / - கொழும்பு சங்கராஜ மாவத்தையில் உள்ள கட்டிடமொன்றின் ஒரு பகுதியினை நிருமாணிப்பதற்கான செலவான ரூபா.60,000/- இனை பொறுப்பேற்றிருக்கவில்லை. இந்த கட்டிடத்தின் ஒரு பகுதியானது அந்த நிலத்தை குத்தகைக்கு எடுத்த ஒரு தரப்பினரால் நிருமாணிக்கப்பட்டிருந்தது. குறித்த தரப்பினர் நீண்ட நாட்களுக்கு முன்னரே இந்த நிலத்தை விட்டு வெளியேறியுள்ளனர்.

இந்தச் சொத்தின் கட்டுப்பாடானது தாபனத்திடமே உள்ளது, மேலும் இந்தச் சொத்தை வாடகைக்கு விடுவதன் மூலம் அது வருமானத்தை ஈட்ட முடியும். ஒரு நிறுவனத்திற்கு ஒரு சொத்தை கட்டுப்படுத்த உரிமை இருந்தால், சொத்திலிருந்து பொருளாதார நன்மைகளைப் பெற்று, சொத்தின் விலை அல்லது மதிப்பைத் துல்லியமாகக் கணக்கிட்டால், கணக்கியல் நியமங்களின்படி அந்தச் சொத்தை சொத்தாக அடையாளம் காணக் கூடியதாக இருக்கும்.

தாபனம் இந்தச் சொத்திற்காக எவ்வித செலவையும் ஏற்றிருக்கவில்லை என்ற போதிலும், 2015 ஆம் ஆண்டு சொத்துக்களை மீள் மதிப்பீடு செய்யும் போது, மதிப்பீட்டாளர் அதனை ரூபா. 60,000/- பெறுமதியுடையதாக மதிப்பீடு செய்துள்ளதுடன் தாபனத்தின் சொத்தாக புத்தகங்களில் கணக்கிடப்பட்டுள்ளது. அதற்கிணங்க, தாபனமானது இந்தக் கட்டிடத்தை ஒரு சொத்தாக அடையாளம் கண்டு கணக்கீடு செய்வது இன்று நியாயமானது என்று நான் வெளிப்படுத்துகின்றேன்.

2019 கணக்குகளின் கணக்குகளினூடாக இந்தச் சொத்தின் மீது அதிகமாகக் கணக்கிடப்பட்ட தேய்மானம் சரி செய்யப்பட்டது. கணக்கியல் மதிப்பீடுகளில் ஏற்பட்ட மாற்றம் காரணமாக இது நடந்ததால், 2019 இல் தேய்மானங்களுக்கான ஒதுக்கீடுகளினை மேற்கொள்வதனூடாக சீராக்கங்களினை மேற்கொள்வதன் மூலம் கணக்குகள் சரி செய்யப்பட்டுள்ளன.

(ஆ) தாபனமானது இந்த கட்டிடத்திற்கான எவ்வித செலவையும் ஏற்கவில்லை. 2015 ஆம் ஆண்டில் சொத்துக்களை மறுமதிப்பீடு செய்வதன் மூலம் வழங்கப்பட்ட சந்தைப் பெறுமதியான ரூபா.360,000/- ஆனது கணக்குகளில் சொத்துகளாக குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த கட்டிடம் தற்போது தாபனத்தின் கட்டுப்பாட்டில் இருப்பதுடன் அது வருமானம் ஈட்டுவதற்கும் பயன்படுத்தப்படுகிறது. எனவே, கட்டிடம் மூன்றாம் தரப்பினருக்கு சொந்தமானது அல்ல, நிலம் தாபனத்துக்கு சொந்தமானது என்பதால், கட்டிடம் தாபனத்தின் கட்டுப்பாட்டில் உள்ளதுடன் கட்டிடத்தின் பொருளாதார நன்மைகள் நிறுவனத்தால் பெறப்படுகிறது என்பதுடன் மதிப்பீட்டாளர்

சந்தை மதிப்பினைத் துல்லியமாக கணப்பீடு செய்துள்ளார். இந்த கட்டிடமானது அடையாளம் காணப்பட்டு தாபனத்தின் சொத்தாக கணக்கிடப்பட்டுள்ளது.

(இ) 2019 இல் இந்த தவறினை நிவர்த்தி செய்வதாகக் கணக்கிடப்பட்டுள்ளது..

(ஈ) பௌதீக ரீதியான மதிப்பு இல்லாத இந்த இருப்பானது, 2004 ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து கட்டுமானப் பொருட்களின் கையிருப்பாக நிதிக் கூற்றுக்களில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்த பெறுமதியினை நிதிக் கூற்றுக்களில் இருந்து பதிவு செய்தால், திறைசேரியிலிருந்து அனுமதி பெறப்படுதல் வேண்டும் என்பதுடன் அதுவரையில் நிதிக் கூற்றுக்களில் இருப்பினைக் குறிப்பிடுதல் வேண்டும். இந்த இருப்பானது எதிர்காலத்தில் பதிவளிப்புக் குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டு, திறைசேரியின் அங்கீகாரத்தினைப் பெற்ற பின்பு கணக்குகளில் இருந்து பதிவளிப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

(உ) இந்த விடயம் குறித்து மதிப்பீட்டாளருடன் விவாதிக்கப்பட்டுள்ளது. அவரது அறிக்கையின்படி, நிலையான சொத்துகள் பதிவேட்டில் குறிப்பிடப்பட்டுள்ள கணக்கு பெறுமதிகள் மற்றும் கணக்கிடப்பட்ட பெறுமதிகள் சரியானவையாகும். மதிப்பீட்டுப் பதிவேட்டில் இல. 07 இன் கீழ் குறிப்பிடப்பட்ட பகுதி 57.7 ஆகவும், அதன் மதிப்பு ரூபா. 8 மில்லியனாக இருந்துள்ளதுடன் இது மதிப்பீட்டுப் பதிவேட்டில் ரூ. 7 மில்லியனாக குறிப்பிடப்பட்டுள்ளது. மதிப்பீட்டுப் பதிவேட்டின் வரைவு கிடைக்கக் கூடியதாக உள்ளதுடன் மதிப்பீட்டாளர் அதைனைச் சரிசெய்து, கூடிய விரைவில் தாபனத்திடம் சமர்ப்பிப்பதற்கு ஒப்புக் கொண்டுள்ளார். எனவே, அறிக்கையினை கணக்காய்வுப் பிரிவிற்கு விரைவில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். நிலையான சொத்துகள் பதிவேட்டில் காட்டப்பட்டுள்ள சொத்துகளின் பெறுமதிகள் சரியானவை என்றும், அந்த நிலுவைகள் துல்லியமாக கணக்கிடப்பட்டுள்ளன என்றும் மேலும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

